Day Class
Physics: திரு. சத்தியசீலன்
Chemistry: திரு. சுகர்
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு குமாரதாஸ்
Pure & Applied Maths: திரு. நவிஸ்வரன்
New Master Institute
B.M.C. Lane, Jaffna

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

நடைபெறுகிறது!
A/L 87 Day Class.
பிரிவு II
8.00 - 9.00 PHYSICS
9.00 - 10.00 CHEMISTRY
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY (PURE & APP
10.00 - 12.00 (MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 17 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 29 (03-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 297

# இந்திய யோசனைகளில் தமிழர் தனி மாகாணம்?

## இன்றைய சந்திப்பில் போராளிகள் நிலை தெரியும்

சென்னை, நவம்பர் 3

தமிழ் மக்களுக்கெனத் தனியான மாகாணம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்து வைக்கும் பொருட்டு இந்தியா தயாரித்துள்ள யோசனைகளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது,

இலங்கை அரசின் யோசனைகள், அதற்குப் பதிலாக தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்த மாற்று யோசனைகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே இந்தியா தனது யோசனைகளைத் தயாரித்துள்ளது.

அந்த யோசனைகள் போராளிகளிடம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டன என்று தெரிய வருகின்றது.

இது பற்றிய அபிப்பிராயங்களை, ஐந்து தமிழ் போராளிக் குழுக்களின் தலைவர்களும் இன்று முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்துப் பேசும்போது தெரிவிப்பர் என எதிர் பார்க்கப்படுகிறது.

இலங்கை இனப் பிரச்சினைப் பேச்சுக்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படும் போராளித் தலைவர்கள் —முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் சந்திப்பு இன்று இடம் பெறுகின்றது.

இலங்கை அரசு - போராளித் தலைவர்கள் சந்திப்பு இடம்பெறுமா என்பது இன்றைய சந்திப்பின் பின்னரே தெரிய வரும்.

உலகத் தமிழர் வட்டாரங்கள் இன்றைய சந்திப்பை உன்னிப்பாக நோக்குகின்றன.

இலங்கை அரசும் இச் சந்திப்புக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து உள்ளது. (அ-எ)

முச்சந்தி முனி



தாங்கள் உயிரோடு தப்புறதுக்கு உதுதான் ஒரு சுகமான வழி எண்டதை அவை இப்ப நல்லாய்க் கண்டு பிடிச்சுவிட்டினம்...!

### சுபநேரம்

03-11-1986

திங்கட்கிழமை

சுபநேரம்:
12.04 முதல் 1.34 வரை

ராகுகாலம்:
7.34 முதல் 9.04 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக் குழு நாளை யாழ் வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 3

கோட்டை முகாம் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்த யாழ் ஆஸ்பத்திரியைப் பார்வையிடுவதற்கு அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு நாளை யாழ்ப்பாணம்வருகிறது.

பாதுகாப்பு அமைச்சர் விடுத்த அறிக்கையை அடுத்தே இந்தத் தூதுக் குழு இங்குவர முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

வைத்திய அதிகாரிகளின் சங்க தூதுக்குழுவின் தலைவர் டாக்டர் கன்மோடி அல்விஸ்,செயலாளர் டாக்டர் ரட்ணப்பிரிய ஆகியோரே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 8 கடைகள் கொள்ளை! மூவர் கொலை!!

கொழும்பு, நவ. 3

பொலன்னறுவை மாவட்டத்தில் மூன்று கிராமங்களில் 8 கடைகள் கொள்ளை இடப்பட்டன. மூன்று சிங்களவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இனந்தெரியாத ஆயுதந் தாங்கிய இளைஞர் கோஷ்டி ஒன்றே கடந்த புதன்கிழமை இக் கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

3 லட்சம் ரூபா வரை பெறுமதியான நகைகள், 4 துப்பாக்கிகள் கொள்ளை இடப்பட்டன.

இச் சம்பவங்கள் மெதிரிகிரியா பொலீஸ் பகுதியில் உள்ள அக்பர்புர, தம்புரான, பள்ளியகொட ஆகிய கிராமங்களில் இடம்பெற்றன. (இ-ஐ.எ)

## பணய கைதிகளுடன் படையினர் பவனி

மட்டக்களப்பு, நவ. 3

களுவாஞ்சிக்குடி முகாமில் இருந்து பெரிய போரதீவுக்கு சென்ற ஆயுதப்படையினர் கட்டெறும்புப் பூச்சி மரத்தடியில் வைத்து போராளிகள் நடத்திய தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்காமல் திரும்பும் வழியில் சுமார் 100 பொதுமக்களைப் பணயமாகக் கொண்டு செல்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை காலை பணயமாகப் பிடிக்கப்பட்ட தமிழர்களுடன் திரும்பும் வழியில் சனி இரவை மணல்பிட்டியில் படையினர் சழித்தனர்.

நேற்று (ஞாயிறு)மாலை மகிழடித்தீவுக்கு படையினர் பணயப் பொது மக்களுடன் வந்து சேர்ந்தனர்.

போராளிகளின் தாக்குதல்களைத் தவிர்க்குமுகமாக பொதுமக்களையும் கூட்டிக்கொண்டு படையினர் திரிகின்றனர்.

பணயமாகப் பிடிக்கப்பட்ட பொதுமக்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தபால் அதிபர் திரு. சிவநாதன், உப தபால் அதிபர் திரு. சபாரத்தினம் ஆகியோரும் உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மட்டக்களப்பு பிரசைகள் குழு, இராணுவ இணைப் பதிகாரியுடன் தொடர்பு கொண்டுள்ளது.

இதனிடையில் கொக்கட்டிச்சோலையில் சில கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பெண் உட்பட மூன்று பேர்காயமடைந்தனர்.

பளுகாமம்,போரதீவு, முனைத்தீவு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலில் 5 வீடுகள் சேதம் அடைந்தன.

அச்சம் காரணமாக சுமார் 2000 பேர் இப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர். (இ-எ-21)

## றாகம் பகுதி தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோருகின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 3

செங்கலடி-பதுளை வீதியில் உள்ள றாகம் என்ற இடத்தில் தீபாவளி தினமான சனிக்கிழமை சிப்பாய்களின் பவ்விள் வாகனம் தகர்க்கப்பட்டதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

சம்பவதினம் ஒரு பவ்விள் வாகனத்திலும் இரண்டு கவச வாகனங்களிலும் சிப்பாய்கள் கரடியனாறு நோக்கி வந்து கொண்டிருந்தனர் என்றும் —

தமிழீழ விடுதலைப் புலிகளின் தரைக் கண்ணித் தாக்குதலில் பவ்விள் வாகனத்தில் இருந்த ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கண்ணிவெடித் தாக்குதலை அடுத்து இடம் பெற்ற நேரடி மோதலின் இறுதியில் சிப்பாய்கள் பின்வாங்கினர்.

அதேசமயம் தாண்டியடி, வெல்லாவெளி, 36ஆம் முகாம் ஆகிய முகாம்களில் இருந்து சிப்பாய்கள் வெளிவந்த போதிலும் எமது வீரர்களின் எதிர்த்தாக்குதல்களை அடுத்து சிப்பாய்கள் பின்வாங்கினர் என்றும் புலிகளின் அறிக்கை தெரிவிக்கிறது. (இ)

### படையினர் பொறுக்கி எடுத்தனர்

மட்டக்களப்பு, நவ. 3

றாகம் என்னும் இடத்தில் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகி சிதறுண்ட தென் ஆபிரிக்கத் தயாரிப்பான ''பவ்விள்'' கவசவாகனத்தின் உதிரிப்பாகங்கள் நேற்று ஆயுதப்படையினரால் பொறுக்கி எடுக்கப்பட்டு ஏறாவூர் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டன. (இ-எ-21)

### சிப்பாய்களுக்கு சிகிச்சை அளிக்க ஆஸ்பத்திரி

கொழும்பு, நவ. 3

பொலன்னறுவையில் நேற்று விமானத் தளம் ஒன்றும் இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றும் திறக்கப்பட்டன.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து இவற்றைத் திறந்துவைத்தார்.

வடக்கு, கிழக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் கோட்டைமுகாமில் இருந்து நேற்றிரவும் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ-10)

### மத்திய கல்லூரி மாணவர்கள் இன்றுபகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவர்கள் இன்று வகுப்புகளைப் பகிஷ்கரிப்பர்.

கடந்த வியாழக்கிழமை கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட துப்பாக்கிக் குண்டுபட்டு மாணவர் தலைவன் பொன்னம்பலம் விபுலானந்தன் மரணமானார்.

அந்தப் பேரிழப்பை உலகுக்கு எடுத்துச் சொல்லும் விதத்தில் பகிஷ்கரிப்பு நடக்க இருப்பதாக கல்லூரியின் மாணவர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறான சம்பவங்கள் கல்லூரியில் நடைபெறமாட்டாது என்பதைஉறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் வரை பகிஷ்கரிப்புத் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் அதே வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

இதே வேளை கல்லூரியின் நிலை குறித்து ஆராய்ந்து தீர்க்கமான முடிவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் சூட்டால் சென்னையில் ஒருவர் பலி!

### 10 பேர் கைது!! ஆயுதங்கள் பறிமுதல்!!!

சென்னை, நவ. 2

சென்னை நகரில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு சமூக சேவையாளர் கொல்லப்பட்டார்; 2 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த 10 போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழ் நாடு பொலீஸ் கமிஷனர் டபிள்யு.ரி. தேவாரம் தெரிவித்தார்.

அவர்களிடம் இருந்து ஆறு தானியங்கித் துப்பாக்கிகள், இரண்டு றிவோல்வர்கள், ரவைகள் மற்றும் வயர்லெஸ் ரேடியோக் கருவிகள் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸ் கமிஷனர் தெரிவித்ததாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த தமிழ் நாடு பிரசையான திரு நாவுக்கரசு ஒரு சமூக சேவையாளர். ஏதோ ஒரு பிரச்சினை காரணமாக ஏற்பட்ட தகராறில் கும்பல் ஒன்றை நோக்கி போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் பொலீஸ் கமிஷனர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு முதலில் வந்த பொலீஸ் கோஷ்டி நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் திரும்பிச் சென்றது. பின்பு மேலதிக பொலீஸார் வந்தே போராளிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

ஆத்திரமடைந்த மக்கள் கூட்டத்தினரிடம் இருந்து பெரும் பிரயத்தனத்துடன் கைதானவர்களை ஏற்றிக் கொண்டு செல்ல நேர்ந்ததாகவும் பொலீஸ் ஆணையாளர் தேவாரம், ராய்ட்டருக்குத் தெரிவித்தார்.

கைதானோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ - எ)

## ஆஸ்பத்திரி மீண்டும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் ஆஸ்பத்திரி இன்று முதல் மீண்டும் ஸ்தம்பிதம் அடைகிறது.

ஆஸ்பத்திரியின் சகல கிளினிக்குகளும் இன்று முதல் மூடப்பட்டிருக்கும்.

அவசர விபத்து சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே சிகிச்சை அளிக்கப்படும்.

மருத்துவ மாணவர்களுக்கான மருத்துவ போதனை வகுப்புகளும் இன்றுமுதல் நிறுத்தப் படும்.

கோட்டையில் இருந்து நடத்தப்படும் ஷெல்தாக்குதல்களை ஆட்சேபித்தே இப்போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கை குழுவின் மறுஅறிவித்தல் வரும் வரை போராட்டம் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## துணைப்படையில் 10,000 பேர்

கொழும்பு, நவ.3

இலங்கை ஆயுதப்படைக்கு துணைப் படையாக மேலும் பத்தாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

வெகுவிரைவில் இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தேசியத் துணைப்படைத் தளபதி திரு. டி. சில்வா தெரிவித்தார்.

5 அடி 4 அங்குல உயரமுடைய 18 – 30 வயதுக் குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

களுத்துறையில் உள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## பத்மநாபா மன்னிப்பு கேட்கிறார் சம்பந்தப்பட்டவர்கள் நீக்கம்

சென்னை, நவ. 2

சென்னை நகரில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற சம்பவம் குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் பத்மநாபா மன்னிப்புக் கோரி அறிக்கை விடுத்திருக்கிறார்.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களை இயக்கத்தில் இருந்து நீக்கி விட்டதாகவும்—

அவர்கள் மீது தமிழ் நாடு பொலீஸார் எடுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கு தனது முன்னணி பூரண ஆதரவு கொடுக்கும் என்றும் திரு. பத்மநாபா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் 'திரு. பத்மநாபா தனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இதனிடையில் தமிழ் நாடு அரசு, முதலமைச்சரின் நிதியில் இருந்து உயிரிழந்த திருநாவுக்கரசுவின் குடும்பத்துக்கு 25,000 ரூபா நஷ்டஈடு வழங்கியுள்ளது. (இ-எ)

## ஆதீனத்தில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 3

நல்லை ஆதீனத்தில் கந்தஷஷ்டி விழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சியான இன்று 'ஈசனுடன் ஞானமொழி பேசு முகம் ஒன்று' என்ற தலைப்பில் அருள்மொழி அரசி வித்வான் திருமதி வசந்தா வைத்தியநாதன் பேசுவார். (இ-எ)

## நிர்வாக அமைப்பை உருவாக்குவது தற்காலிக அரசுக்கான பிரகடனமல்ல

### ஏ. எவ். பி. செய்தி குறித்து விளக்கம்

சென்னை, நவ. 2

சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்குவதான அறிவிப்பு, தற்காலிகமான அரசு ஒன்றைப் பிரகடனப்படுத்துவது ஆகாது.

1-1-1987 தொடக்கம் தமிழீழப் புலிகள் சுதந்திர தமிழீழத்தை உருவாக்கும் பிரகடனத்தை வெளியிட இருப்பதாக ஏ. எவ்.பி. செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட செய்தி குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சாளர் மேற்கண்டவாறு விளக்கம் அளித்தார்.

இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் சென்னையில் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

அவர்சொன்னதாவது:

1-1-1987 முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்குவதான அறிவிப்பு, தற்காலிகமான அரசு (Provisional Government) ஒன்றைப் பிரகடனப்படுத்துவதாகாது.

### பாதிப்பை உண்டாக்காது

இலங்கை அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு யோசனைகளுக்கு எந்தப் பாதிப்பையும் இது ஏற்படுத்தாது.

சிவில் நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவதாக விடுக்கப்பட்ட அறிவிப்பை சுதந்திரப்பிரகடனமாகக்காட்டி இந்தியாவுக்கு எரிச்சலை உண்டாக்கவே இலங்கைஅரசு முயல்கின்றது.

குடாநாட்டில் சிவில் நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடமே தற்சமயம் உள்ளது.

எமது அறிவிப்பு 1-1-87 முதல் இது ஒரு நிர்வாக அமைப்பின்கீழ் இயங்கும் என்பதைத் தான் காட்டுகிறது. இது புதிய சமாசாரம் அல்ல.

### சிவில் நிர்வாகம்

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தப்போவதாகத் தான் நாம் சொன்னோம். தற்காலிக அரசு ஒன்றை நிறுவப்போவதாக நாம் சொல்லவில்லை.

யாழ் குடாநாட்டில் நாம் அனுமதிப்பத்திரங்களை வழங்கி வருகிறோம். போக்குவரத்து பொலீஸ் அமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சித்து வருகிறோம்.

உள்ளூர் நிர்வாக அமைப்புக்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவே தமிழீழ செயலகம் நிறுவப்படவுள்ளது.

யாழ் குடாநாட்டில் எல்லா வீதிகளும் பழுதடைந்துள்ளன. அவற்றைத் திருத்தவேண்டும்.

மாநகர, நகரசபைகள் இயங்கவில்லை. அவற்றை

(4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### இலவச சேவை

பலாலி, நவ. 3

வலி கிழக்கு தனியார் போக்கு வரத்துச் சேவைச் சங்கம் தனது சேவைப் பகுதியில் விழிப்புலன் இழந்தவர்களுக்கு இலவச போக்குவரத்து வசதியைச் செய்து கொடுக்க முடிவு செய்துள்ளது.

அண்மையில் அச்சுவேலி லயன்ஸ் கழகம் நடத்திய வெள்ளைப் பிரம்பு வழங்கல் தினத்தில் கலந்துகொண்ட சங்கத் தலைவர் திரு. நா. மதனசேகரம் இத்தகவலைத் தெரிவித்தார். (உ-119)

### கண்ணகி நிலையத் திறப்பு விழா

கரவெட்டி, நவ. 3

உடுப்பிட்டி இமையாணன் கண்ணகி சனசமூக நிலையத்திற்கென சுமார் 10 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடம் அண்மையில் நிலையத் தலைவர் திரு. இரா. பரமசாமியினால் திறந்து வைக்கப்பட்டது.

கட்டடத்தின் பெயர் பலகையை உப. தலைவர் திரு. பெ. ஐயாத்துரை திரைநீக்கம் செய்தார்.

இச்சனசமூக நிலையக் கட்டடத்தை அமைப்பதற்கான காணியை காலஞ் சென்ற திரு. திருமதி. ஜேம்ஸ் முத்தையா ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர்.

இவர்களுடைய உருவப்படத்தை திருமதி மகேஸ்வரி பரமசாமி திரைநீக்கம் செய்து வைத்தார். நிலையக் கொடியை திரு. த. சின்னத்தம்பி ஏற்றினர். (உ-70)

### அகதிகளுக்கு உதவி

மன்னார், நவ. 3

1985 ஆகஸ்ட் கலவரத்தின்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பூமலர்ந்தான், கட்டை அடம்பன், மடுரோட் ஆகிய இடங்களில் அகதிகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு மடு தேவாலய அகதிமுகாமில் தங்குமிடம் அமைத்துக்கொடுக்கப்பட்டது

இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க அரசாங்க அதிபர் ஜனாப் மக்பூல் நடவடிக்கைஎடுத்து வருகிறார். இந்த அகதிகள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று வீடுகளைத் திருத்தியதை உறுதிப்படுத்தியவுடன் அவர்களுக்கு அதற்கான பணத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

### விவசாயக் கருத்தரங்கு

பலாலி, நவ. 3

இடைக்காடு இளைஞர் விவசாயக் கழகமும், இடைக்காடு சனசமூக நிலையமும், புத்தூர் விவசாயப் போதனாசிரியரும் இணைந்து நடத்தும் விவசாயக் கருத்தரங்கு இடைக்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். (உ-119)

### நிகழ்ச்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் நவ. 3

யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் ஆதரவுடன் நல்லூர் கல்விவள நிலையம் நடத்தும் நல்லூர் வட்டார பாடசாலை ஆசிரியர், மாணவருக்கான நாடகக்களப் பயிற்சியில் உருவான சமூக நாடகமான 'தியாகத் திருமணம்' அரங்கேற்றமும், கல்வி வள நிலைய ஆறும் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகளும் இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகள் கடந்த வெள்ளியன்று நடைபெறவிருந்தன.

தவிர்க்கமுடியாத காரணங்களால் இந்நிகழ்ச்சிகள் பின்போடப்பட்டதாக கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (உ - 5)

### மரம் நடுகை

பலாலி, நவ. 3

வலி கிழக்கு வடபகுதிக் கூட்டுறவுச் சங்கத்தினுள்ளும், அதன் கிளை நிறுவனங்களிலும் மரம் நாட்டு விழா வைபவ ரீதியாக நடத்தப்பட உள்ளது.

நாளை செவ்வாய்க் கிழமை சங்கத் தலைவர் திரு. சி. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அன்றைய தினம் பொது மக்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-119)


வகுப்புகள்

SCIENCE CENTRE KARAVEDDY

க. பொ, த (உயர்) 87 ஆகஸ்ட் விடைவிடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு. விஞ்ஞான பாடங்கள் மட்டும், ஆரம்பம்- 7-11-1986.

A/L 87

தூய பிரயோக கணிதம்

துரித மீட்டல் பகல் நேர வகுப்பு

ஆரம்பம்: 5-11-86

7.45: காவிகள்

9.00: அட்சர கணிதம்

(கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:

ரவிமோகன்

யாழ்ப்பாணம்

(வெலிங்டன் சந்திக்கும் பருமாள் கோவிலுக்கும் நடையில்)

G. C. E. (A L.)1987

Evening Classes

PHYSICS — VARNAM

3 - 11 - 86 புதிய பிரிவுகள் ஆரம்பம்

திங்கள், வெள்ளி 3 — 4 Electricity

திங்கள், வெள்ளி 4 — 5 Mechanics

New Master Institute

B. M. C. Lane, JAFFNA.

விமானச்சீட்டுக்கள், பாஸ்போர்ட் பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIMATION, RE-CONFIMATION

தொலைபேசிச் சேவை: 23364, 28866

நிப்பொன் ரெலி ரவல்ஸ்

2 G ஸ்ரான்லி வீதி,

கஸ்தூரியார் - ஸ்ரான்லி வீதிச் சந்தி,

யாழ்ப்பாணம்.


இனப் பிரச்சினையில்

# இரு இனங்கள் மட்டும் அல்ல வல்லரசுகளும் சம்பந்தம்

## புத்திஜீவிகள் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும் என்கிறார் தேவானந்தா

யாழ்ப்பாணம், நவ. 3

இனப்பிரச்சினையில் இரு இனங்கள் மட்டும் அல்ல வல்லரசுகளும் சம்பந்தப்பட்டுள்ளன. ஆகவே புத்திஜீவிகள் இந்த சிக்கலை உணர்ந்து இரு சமூகங்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தென் இலங்கையில் இருந்து வந்த வண. பிதா தேவானந்தா கூறினார்.

அமரர் பிஷப் லக்ஷ்மன் விக்கிரமசிங்காவின் நினைவு தினக் கூட்டம் சனிக்கிழமை யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது.

சிங்களவரையும் தமிழரையும் தனித்தனியே வாழவிடுவதா? என்பது பற்றிய கேள்வியும் பதிலும் நினைவு தினக் கூட்ட இறுதியில் இடம்பெற்றது.

பிரபல கல்விமானான திரு. எஸ். வன்னியசிங்கம்:

'சிங்களவரையும் தமிழரையும் அவரவர் பாட்டுக்கு வாழவிடுங்கள்'.

கொழும்பில் இருந்து வந்த வண பிதா தேவானந்தா பதிலளிக்கையில் சொன்னதாவது;

'சிங்களவர்களையும் தமிழர்களையும் அவரவர் பாட்டுக்கு வாழவிடுங்கள்' என்ற குரல் கேட்கிறது.

இளையோரும் முதியோரும் இவ்வாறு குரல் கொடுக்கிறார்கள் இக்குரலின் பின்னணியில் ஒரு வேதனைத் தொனியை, விரக்தியை எம்மால் உணர முடிகிறது.

தமிழ் மக்கள் படும் அவஸ்தை, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் ஆகியவற்றின் பின்னணியில் இக்குரல் எழுகிறது.

தமிழ் மக்கள் எப்படித் தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று சொல்லும் உரிமை எமக்கு இல்லை.

அதை அவர்கள் தீர்மானித்து, அவர்கள் வழியில் போராட்டத்தை நடத்தவேண்டும்.

அதே வேளையில் இனப் பிரச்சினையின் நெருக்கடி நிலையை உணரவேண்டும்.

இதன் பின்னணியில் இரு இனங்கள் மட்டும் அல்லாமல், வல்லரசுகள் சம்பந்தப்பட்டுள்ள சிக்கலை உணர்ந்து, புத்திஜீவிகள் இரு சமூகங்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும்.

—இவ்வாறு வண பிதா தேவானந்தா கூறினார்.

## யாழ் நகரில் ஹேலீஸ் திறந்துவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 3

ஹேலீஸ் போட்டோ பிரிண்ட் லிமிட்டெட் நிறுவனம் யாழ் நகரில் சனிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

அன்று காலை 10 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி இல. 380 இல் உள்ள கட்டடத்தில் வடமாகாண அக்வா புகைப்படச்சுருள் விற்பனை முகாமையாளர் திரு. நவராசசிங்கம் விமலானந்தன் இதனைத் திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய அவர், வடபகுதியிலிருந்து புகைப் படச்சுருள்களை கொழும்புக்கு எடுத்துச் சென்று கழுவுவதில் உள்ள சிக்கல் குறித்து விவரித்தார்.

இந்த வருடத்திற்கான சிறந்த புகைப்படக் கலைஞர்களுக்கும் சிறந்த ஸ்ரூடியோக்களுக்கும் அதிகப்படியான அக்வா புகைப்படச் சுருள்களைப் பாவித்த ஸ்ரூடியோக்களுக்கும் சிறந்த பரிசில்களும் அங்கு வழங்கப்பட்டன.

நகைச்சுவை மன்னன் கே. எஸ். பாலசந்திரனின் நகைச்சுவை நிகழ்ச்சியும் அங்கு இடம்பெற்றது. (உ-10)

## இருவர் பலி

மட்டக்களப்பு, நவ. 3

சர்வோதய பண்ணைக்கு அலுவல்கள் நிமித்தம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு இளைஞர்கள் ரோந்து வந்த படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகியுள்ளார்கள். மற்றுமோர் இளைஞர் காயமுற்றார்.

இச்சம்பவம் அண்மையில் சத்துருகொண்டான் என்னுமிடத்தில் நடைபெற்றது.

தாமரைக்கேணி வாசிகளான க. விஜயநாதன் (20 வயது), கே. பீலிக்ஸ் ஆகியோர்தான் பலியானவர்கள்.

இருவரது சடலமும் படையினரால் எரிக்கப்பட்டதாக உறவினர்கள் பிரசைகள் குழுவிடம் புகார் செய்துள்ளார்கள். (உ-21)

## விளையாட்டரங்கு

### யாழ்ப்பாணக் கல்லூரி ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 3

மாணவர் முன்னணி நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி வரிசையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணக் கல்லூரியுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி இந்த ஆட்டத்தில் மோதியது.

இவ்விரு கல்லூரிகளும் முதல் நடந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதல் கோலைப் போட்டது. அதற்குப் பிறகு யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள் 3 கோல்களைப் போட்டார்கள்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. சம்பந்தன் கடமையாற்றினர்.

சனிக்கிழமை நடைபெற்ற 2 ஆவது ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மோதியது.

இரு கல்லூரி வீரர்களும் போட்டி போட்டு தங்களது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி விறுப்விறுப்பாக ஆடினர்கள்.

எந்தக்கல்லூரி வெற்றி பெறும் என்ற கேள்விக் குறியோடு இருந்த கட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலில் ஒரு கோலைப் போட்டது.

அதற்குப் பிறகு ஆட்டவேகம் இன்னும் கூடியது. அவ்வேளையில் ஸ்கந்தா 1 கோலைப்போட்டு சமநிலையில் ஆட்டம் இருந்தது. பின்பு ஸ்கந்தா 2 ஆவது கோலையும் 3 ஆவது கோலையும் போட்டது.

மானிப்பாய் இந்து மேலும் 1 கோலைப் போட்டது.

ஸ்கந்தா ஆட்ட முடிவு நேரத்தில் மேலும் 1 கோலைப் போட்டு 4:2 என்ற கோலால் மானிப்பாய் இந்துவை வென்றது. இரு போட்டிகளும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. (இ)

### ஸ்கந்தா நெல்லியடி இன்று மோதல்

யாழ்ப்பாணம், நவ. 3

மாணவர் முன்னணி நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி வரிசையில் இன்று 3 ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதுகின்றன.

இன்று 3 ஆம் திகதி மாலை 4 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் போட்டி நடைபெறும். (இ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் தரமுயர மக்கள் ஆதரவு தேவை

### உப வேந்தர் விடுக்கும் கோரிக்கை

மட்டக்களப்பு, நவ. 3

கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் இந் நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக் கழகங்களைவிட இளைய பராயத்தில் இருந்தாலும் அது பல சாதனைகளை நிலைநாட்டக் கூடியதாகவிருக்கும். இச்சாதனைகளை நிலைநாட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டுமல்ல இப்பகுதி பொதுமக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற தரமுயர்த்தல் கொண்டாட்டத்தால் உரையாற்றிய உபவேந்தர் பேராசிரியர் கே. டி. அருட்பிரகாசம் குறிப்பிட்டார்.

வளாக மாணவர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள், மதகுருமார்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இன்றைய அரசு பொருளாதார நிலையில் தனது செலவினங்களை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இருப்பினும் ஜனாதிபதி கிழக்கு மாகாண மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் சுதந்திரமானதாகவும், பூரணத்துவமானதாகவும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகமாக எமது வளாக கல்லூரியைத் தரமுயர்த்தியுள்ளார்.

இலங்கையில் 1940 ம் ஆண்டுகளில் தான் பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அக்கால சூழ்நிலைக்கேற்ப இன்றைய பல்கலைக் கழகங்களின் கல்வி முறை அமைந்திருந்தது. அது தொடர்ந்து வருகிறது.

எமது பல்கலைக்கழகம் அண்மித்துவரும் 21-ம் நூற்றாண்டுக்கு ஈடுசெய்யக்கூடிய கல்விமுறையை வகுத்து செயல்படுத்த நாம் தயாராக இருக்க வேண்டும்.

இந்நிலையில் விஞ்ஞான, தொழில்நுட்ப, சக்தி துறைகளில் நவீன முறைகள் கையாளப்படவேண்டும்.

இப் பல்கலைக்கழகம் கிழக்கு மாகாண மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வதாக அமைந்தாலும் நாடுபூராகவும் தனது சேவைகளை அர்ப்பணிக்கும். -இப்படி அவர் கூறினர்.

பதிவாளர் ஜனாப். எஸ். எச். எம். ஜமீல் உரையாற்றுகையில்-

சுவாமி விபுலானந்தர் ஒரு பல்கலைக்கழகம் எப்படி அமையவேண்டுமென வரைவிலக்கணம் வகுத்தார்.

அவர் அவதரித்த இப் பூமியில் உதயமாகியுள்ள இப் பல்கலைக்கழகம் அவரின் கோட்பாடுகளுக்கமைய வளர்ச்சியடைய வேண்டும் என்றார்.

மாணவர் பேரவைத் தலைவர் செல்வன் இ. கிரிதரன் உரையாற்றுகையில்-

இங்கு கல்வி பயிலும் மாணவர்களிடையே எவ்வித வேறுபாடுகளும் இல்லை. அனைவரும் அன்பு ஐக்கியத்துடன் பழகுகின்றோம் என்றார். (உ-21)

## பொறியியல் பீட மாணவர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 3

பொறியியற் பீடத்திற்கு 1986 - 87 ஆம் கல்வியாண்டிற்குத் தெரிவு செய்யப்பட்டு உள்ள சகல மாணவர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் யாழ்- பல்கலைக் கழக பொது அறையில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி பொறியியற்பீட மாணவர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொறியியற் பீட மாணவர்களின் தற்போதைய நிலை, புதிய மாணவர்களின் வருகை போன்ற விடயங்களோடு புதிய மாணவர்களுக்கான, பொறியியற்பீட மாணவ சங்கத்தினர் சில ஆலோசனையையும் வழங்க உள்ளதால் சகல புதிய பொறியியற் பீட மாணவர்களையும் இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ-10)

### முகாமைத்துவ பயிற்சி

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கும் மாதர் சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாதர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி ஒன்றை வலி. கிழக்கு வடபகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. கமலநாதன் ஒழுங்கு செய்துள்ளார். (இ-119)

## தேர்தல் இடாப்பில் பெயர் பதிவாகுவதை உறுதிப்படுத்துங்கள்

யாழ்ப்பாணம், நவ. 3

புதிய தேர்தல் இடாப்பில் பெயர் விடுபட்டவர்கள் தங்கள் கோரிக்கைகளை யாழ் உதவித் தேர்தல் அதிகாரியிடம் நவம்பர் 3ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 1986 ஆம் ஆண்டுக்கான புதிய தேர்தல் இடாப்புக்கள் யாழ் குடாநாட்டில் உள்ள கிராமசேவையாளர் அலுவலகங்கள், தபால் அலுவலகங்கள், மாநகரசபை, நகரசபை அலுவலகங்கள், பிரதேச உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த இடாப்புக்களில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பெயர்கள், தற்போதைய பெயர்கள் எல்லாம் இடம் பெற்றுள்ளன.

பாஸ்போர்ட் எடுக்கவும் ஆசிரியர் நியமனங்கள் சம்பந்தமான நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளும்போதும் தேர்தல் இடாப்புப் பதிவுகள் வலியுறுத்தப் படுவதால், புதிய இடாப்புக்களில் தங்கள் பெயர்கள் இருக்கின்றதா என்பதைப் பார்த்து உறுதிப் படுத்திக்கொள்ளுதல் அவசியம். இடாப்பில் பெயர் இல்லாதவர்கள் பெயரைச் சேர்க்க விண்ணப்பிக்கவேண்டும்—இப்படி தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## அன்னை இந்திராவின் பெயரில் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், நவ. 3

அன்னை இந்திரா காந்தியின் நினைவு தினமான கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இருபாலை விதானையார் வீதியில் 'அன்னை இந்திரா' சனசமூக நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த இருபாலை கிழக்கு பிரசைகள் குழுவின் தலைவர் திரு. எஸ். சபாரத்தினம் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

திரு. ரி. ஆர். செல்வரட்ணம் அன்னை இந்திராவின் திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

திரு. எஸ். கனகையா, பண்டிதர் த. இராசரட்ணம், கோப்பாய் உப அலுவலக சன சமூக நிலைய சமாசத் தலைவர் திரு. சிவானந்தமூர்த்தி ஆகியோர் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர். (உ-10)

## தனிநாடு அமைப்பதை முழுமையாக எதிர்க்கிறோம்

### விஜயகுமாரணதுங்க கூறுகிறார்

கொழும்பு நவ. 3

எமது முக்கிய நோக்கம் ஒற்றை ஆட்சி அமைப்பைப் பாதுகாப்பதே. தனிநாடு அமைப்பதை நாம் முழுமையாக எதிர்க்கிறோம். எமது ஐக்கிய முன்னணியும் தனிநாட்டுக் கோரிக்கையை எதிர்க்கின்றது.

இப்படி ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர் விஜயகுமாரணதுங்க மினுவாங்கொட பட்டினசபை மைதானத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் சொன்னர்.

அவர் மேலும் சொன்னதாவது;

சிங்களவருக்கு எதிராக வடபகுதியில் யுத்தம் நடத்தப்படவில்லை. ஜெயவர்த்தன அரசுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் போராளிகள் சொந்த அரசாங்கம் ஒன்றை தங்கள் கொள்கைக்கு இணங்க நடத்துகின்றனர்.

—இப்படி விஜயகுமாரணதுங்க சொன்னர்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க உட்படப் பலர் பேசினர். (உ-எ)

## இலங்கையருக்கு சிம்பாப்வேயில் தொழில்

கொழும்பு, நவ. 3

சிம்பாப்வே அரசு, இலங்கையருக்குத் தொழில் வாய்ப்பளிக்க முன்வந்துள்ளது.

அண்மையில் சிம்பாப்வே அரசுக்குழு ஒன்று இலங்கை வந்து நேர்முகப் பரீட்சைகளை நடத்தியது.

ஆசிரியர், தொழில் நுட்ப அதிகாரிகள், பொறியியலாளர்கள் எல்லாமாக 50 பேர் நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்டனர்.

தெரிவானவர்கள் விரைவில் சிம்பாப்வே சென்று அரசு திணைக்களங்களில் பணியாற்றுவர்.

மேலும் இலங்கையரைத் தெரிவு செய்ய அடுத்த ஆண்டு கொழும்பு வருவதாக சிம்பாப்வே குழு கூறியிருக்கிறது.

ஸாம்பியா போன்று சிம்பாப்வே அரசும் வெளிநாட்டார் சம்பளத்தில் 30 முதல் 40 சதவீத பணத்தையே சொந்த நாட்டுக்கு அனுப்ப அனுமதியளித்துள்ளது.

இதுவரை காலமும் இலங்கையில் ஆசிரியர்களுக்கு தொழில் வாய்ப்பு அளித்த மாலைதீவு அரசு, வேறுரக தொழில்களுக்கும் இலங்கையரை வரவழைக்க முடிவு செய்துள்ளது. (உ - எ)

## கொத்தணி பாடசாலை வேலணையில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் நவ. 3

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர்திரு. இரா. சுந்தரலிங்கத்தால் கொத்தணிப் பாடசாலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வித்தியாலயத்தின் அதிபரும் வேலணைக் கொத்தணிப் பாடசாலைகளினது அதிபருமான திரு. மு. சிவராசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதம கல்வி அதிகாரியும் கொத்தணிப் பாடசாலைகளினது பொறுப்பதிகாரியுமான திரு. எஸ். கந்தசாமி, வேலணைக் கல்வி வலய வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் உட்படக் கொத்தணிப் பாடசாலை அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பாடசாலைகளினது அதிபர்களும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தின் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (உ-167)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனே அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்ளுவான்.

— பைபிள்

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805 22073
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 03-11-1986 த. பெ. இல. 23

# தமிழர் நிலையைப் புரிந்து கொள்ளுதல்

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இரு கிறிஸ்தவப் பிரமுகர்கள் அர்த்த புஷ்டியான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களது நீதியான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமே சமாதானத்தை உருவாக்க முடியும்.

ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு குரல் கொடுப்பதால் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது.

இவ்வாறு வண. பிதா போல் கஸ்பேர்ஸ் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பக்கம் நியாயம் இருக்கிறது. அவர்கள் கோரிக்கை நீதியானது. அவர்கள் தமது மனித உரிமைகளுக்காகவே குரல் கொடுக்கிறார்கள், இதுவே எமது நிலைப்பாடாகும்.

இவ்வாறு வண. பிதா யோகான் தேவானந்தா சொன்னார்.

இந்தக் கருத்துகளை தென்னிலங்கையில் உள்ள விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் புரிந்து கொள்வதால் பயனில்லை. பலர் புரிந்து கொள்ளவேண்டும். அதோடு நிற்காது அவற்றைப் பரப்பவும் வேண்டும். அப்போது தான் சமாதான வழியால் தமிழருக்கு ஏதாவது சாதகமாகலாம்.

தென்னிலங்கைக் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சமய ரீதியாகச் சிறுபான்மையினர்; இனரீதியாகப் பெரும்பான்மையினர்.

தமிழ்ச் சிறுபான்மையினரின் நியாயமான அபிலாஷைகள் குறித்தும், நீதியான கோரிக்கைகள் பற்றியும் சிறுபான்மைக் கிறிஸ்தவர்களால் பெரும்பான்மை பௌத்தர்களுக்கு எந்தளவுக்குப் புரியவைத்து, வெற்றி காண முடியும் என்பது கேள்விக்குறியே.

தென்னிலங்கையில் கிறிஸ்தவர்களாக உள்ள சிங்கள மக்கள் மத்தியிலாவது தமிழர் நடத்தும் போராட்டம் நியாயமானது, அவர்களது அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டியவை என்ற கருத்தை வண. பிதா போல் கஸ்பேர்ஸ் போன்ற பெரியார்களால் பரப்ப முடியுமா என்பதும் சிந்திக்கப்பட வேண்டியதே.

இந்தச் சந்தேகம் எழுவதற்கு நிரம்ப இடமுண்டு, அதற்கான காரணங்கள் பலவற்றில் ஒன்றை மட்டும் இங்கு கூறினால் போதும் என்று நினைக்கிறோம்.

ஆயுதம் ஏந்தாத அப்பாவித் தமிழ் மக்கள் அரசாங்க ஆயுதப்படையினரால் நாளாந்தம் கொல்லப்படுகிறார்கள். இது குறித்து ஐ. நா. வில் முறையிட வேண்டிய காலம் வந்துவிட்டது. இவ்வாறு யாழ் ஆயர் அதி. வந். வ. தியோகுப்பிள்ளை தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்துக்குத் தென்னிலங்கைக் கிறிஸ்தவர்களிடம் இருந்து எழுந்த கண்டனமும், ஆட்சேபமும் அவர்கள் எங்கே நிற்கிறார்கள் என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டியது.

சமய ரீதியில் தாமும் ஒரு சிறுபான்மையினர் என்ற நிலையை மறந்து, தமிழருக்கு இன்று நடப்பது தமக்கு நாளை நடக்கலாம் என்பதை மறந்து தென்னிலங்கைக் கிறிஸ்தவப் பிரமுகர்கள் பலரும் யாழ். ஆயரைக் கண்டித்தார்கள்.

சிங்களவர் சிங்களவர்தான், தமிழர் தமிழர்தான். சமயம் அவர்களை இணைக்காது, இனப் பிரச்சினை விடயத்தில் ஒரே கருத்து உடையவர்கள் ஆக்காது என்று தமிழ்க் கிறிஸ்தவர்கள் நினைக்கும் அளவுக்கு தென்னிலங்கைக் கிறிஸ்தவர்களின் மனப்போக்கு மிகத் துலாம்பரமாகத் தெரிந்தது.

சிங்கள, தமிழ் கிறிஸ்தவர்களிடையே இனரீதியான பிளவு 1977 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமாகி விட்டது எனலாம்.

மலையகத் தமிழ்த் தொழிலாளர் நலனுக்காக நீண்டகாலம் உழைத்த வண. பிதா கஸ்பேர்ஸ் யாழ்ப்பாணத்துப் பேச்சில் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

''1956, 1958 ஆம் ஆண்டுக் கலவரங்களின்போது கிறிஸ்தவர் வாழ்ந்த பகுதிகள் தமிழர்களுக்குப் பாதுகாப்பான பிரதேசங்களாக விளங்கின. ஆனால் பின்னர் இடம் பெற்ற கலவரங்களில் அப்பகுதிகளிலும் வன்முறைகள் நிகழ்ந்தன. கிறிஸ்தவச் சிங்களவர்கள் கூட இவற்றில் பங்கு பெற்றார்கள் என்பது வேதனை தருகிறது'' என்று அவர் உண்மை நிலையை எடுத்துச் சொல்லியுள்ளார்.

வண. பிதா கஸ்பேர்ஸ் போன்றவர்கள் தமது தென்னிலங்கைக் கிறிஸ்தவ சகோதரர்களின் போக்கை மாற்றுவதற்கு முயல வேண்டும். தமிழர் குறித்துப் புரிந்துணர்வை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

அப்படிச் செய்வதன் மூலம் தமிழர்களின் போராட்டம் நியாயமானது, கோரிக்கைகள் நீதியானவை, அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை என்பதைப் புரிந்து கொள்ளும் சிறுகூட்டமாவது தென்னிலங்கையில் உருவாக வழி பிறக்கும் அல்லவா?

# பர்னாலாவை மதம் விலக்க தீர்மானம்

## தீவிரவாதிகள் முடிவு

சண்டிகார், நவ. 2

பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலாவையும் அவரின் நிதி அமைச்சர் பல்வந்சிங்கையும் சீக்கிய மதத்திலிருந்து விலக்கிவிடுவதென தீவிரவாதிகளின் உயர்மட்டக் கூட்டமொன்றில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் சீக்கிய மதத்திற்கும் தமது சமூகத்திற்கும் துரோகம் இழைத்து விட்டார்கள் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

பொற்கோயிலில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு நாற்பதாயிரம் தீவிரவாத சீக்கியர்கள் கலந்துகொண்டனர். (ஓ)

### நிக்கராகுவா மோதல்கள்

மனுகுவா, நவ.2

நிக்கராகுவாவில் கிளர்ச்சியாளர்களுக்கும் படைவீரர்களுக்குமிடையேயும் பலத்த மோதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரமாக இந்தச் சண்டை நடப்பதாக நிக்கராகுவா ஜனாதிபதி டானியல் ஒட்டாகா தெரிவித்தார்.

இந்தச் சண்டையில் சுமார் 80 கிளர்ச்சியாளர்களும் 35 படைவீரர்களும் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஓ)

**வெளி உலகில்**

### யூகோவில் இந்திய ஜனாதிபதி

பெல்கிரேட், நவ. 3

ஜவர்கர்லால் நேருவும் மாஷல் டிட்டோவும் ஏற்படுத்திய இருநாடுகளுக்கிடையே அன்பும் உண்மையும் நிலவும் நட்புறவு தொடர்ந்தும் நீடித்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வாறு இந்திய ஜனாதிபதி ஜானி ஜெயில் சிங் யூகோஸ்லாவியாவில் தமக்கு அளிக்கப்பட்ட விருந்து ஒன்றில் உரையாற்றும் பொழுது குறிப்பிட்டார்.

நேற்று ஞாயிற்றுக் கிழமை இந்திய ஜனாதிபதி தமது யூகோ பயணத்தை முடித்துக் கொண்டு கிரேக்கம் புறப்பட்டார். (ஓ)

## பாகிஸ்தானில் மீண்டும் இனக் கலவரங்கள்

இஸ்லாமாபாத், நவ.2

பாகிஸ்தானில் நேற்று நடைபெற்ற இனக்கலவரத்தில் எட்டுப்பேர் பலியாகினர். பதினறு பேர் படுகாயமுற்றனர்.

இந்த இனக்கலவரம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது.

பஸ்ஸொன்றில் குண்டு வீசப்பட்டதால் 5 பேர் உடல் சிதறுண்டு மரணமானார்கள். இதில் பெரும்பாலும் ஆப்கான் அகதிகள் பயணம் செய்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் இரண்டு போட்டிக் குழுக்களுக்கிடையே நடந்த மோதலில் மூவர் பலியானார்கள்.

கராச்சியிலும் ஹைதராபாத்திலும் வெள்ளிக்கிழமை நடந்த மோதலின் பின் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவை மீறி வன்முறைகள் நடந்துள்ளன.

வாகூரில் ஒரு பல்கலைக் கழக கட்டடத்தை மாணவர்கள் எரித்தனர். பல வாகனங்களை கைப்பற்றினர். (ஓ)

# போராளிகளுக்கு லிபிய உதவி இரட்டிப்பு

## கடாபி அறிவிப்பு

திரிபோலி, நவ. 2

உலகில் உள்ள சகல விடுதலைக் குழுக்களுக்கும் லிபியா வழங்கி வந்த உதவி கடந்த ஏப்ரல் மாதத்தின் பின்னர் இருமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு லிபிய ஜனாதிபதி கேர்ணல் கடாபி தெரிவித்தார்.

அமெரிக்கா லிபியா மீது அணுகுண்டுத்தாக்குதலை நடத்தினாலும் கூட லிபியா போராட்ட இயக்கங்களுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்தாது.

பாலஸ்தீனியர் தமது நாட்டை ஒரு தளமாகப் பாவிக்க விரும்பினாலும் அதற்கும் இடமளிக்கப்படும். (ஓ)

### மாநிலங்கள் நினைவு நாள்

ஹைதராபாத், நவ.2

ஆந்திர பிரதேசம், கேரளா, கர்நாடகம், மத்திய பிரதேசம், ஹரியானா மாநிலங்கள் உருவாக்கப்பட்ட நினைவு நாள் நேற்றாகும்.

இதனையொட்டி அந்தந்த மாநிலங்களில் விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

ஆந்திராவில் 27 சிறந்த தலைவர்களின் சிலைகளை முதலமைச்சர் என். டி. ராமராவ் திறந்து வைத்தார்.

### குண்டு வெடிப்பு

லண்டன், நவ.2

மேற்கு ஜெர்மனியில் தேசிய விமான சேவையான லுவ்தான்ஸாவின் தலைமை அலுவலகத்தில் குண்டு ஒன்று வெடித்தது.

பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டன. ஆனால் யாரும் காயமடையவில்லை. (உ)

### சிங்கப்பூர் முடிவு

சிங்கப்பூர் நவ. 2

தென் ஆபிரிக்காவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என்று சிங்கப்பூர் முடிவு செய்துள்ளது. (ஓ)

## உலக அமைதிக்கு சந்திப்பு உதவியது


வாஷிங்டன் நவ. 2

கடந்த மாதம் ஐஸ்லாந்தில் ரஷ்ய அதிபர் கோபர்ச்சேவுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை உலக அமைதியை வலுப்படுத்துவதற்கு நல் வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி றேகன் தெரிவித்தார்.

கடந்த 40 ஆண்டுகளில் இருந்ததைவிட இப்பொழுது நல்லவாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக றேகன் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க யோசனைகள் இன்னும் விலக்கப்படவில்லை. விண்வெளி போராயுதத்திட்டத்தைக்கை விடும்படி ரஷ்யா செய்யும் நெருக்கடிகளுக்குத் தாம் பணிந்து விடப் போவதில்லை எனவும் கூறினர்.

எனினும் விண்வெளிப் போராயுதத்திட்டத்தைக் கைவிடும் யோசனையை ஏற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் பல புதிய தடைகளை அமெரிக்கா தொடர்ந்தும் போடுவதாக ரஷ்யா குறை கூறியது. (ஓ)



**பொய்யாமொழி**

**குறள்:**

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

**பொருள்:**

பொய்யாமை ஆகிய அறத்தை உண்மையாகவே போற்றி வாழ முடிந்தால், மற்ற அறங்களைச் செய்தலும் நல்லதும் ஆகும்.

**சமய சந்நிதிகளில்**

### சித்திரவேலாயுதர் ஆலயத்தில்

சாவகச்சேரி, நவ. 4

மீசாலை தெற்கு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் வழமைபோல் இவ்வாண்டும் கந்தர்சஷ்டி விழா நடைபெறுகிறது.

இவ்விழா எட்டாம் திகதி இடம்பெறும் திருக்கல்யாண வைபவத்துடன் முடிவடையும்.

தினமும் அபிஷேகம், பூசை ஆகியவையுடன் அருளுரைகளும் இடம் பெறும். (இ-31)

### ஹமீத்தின் புத்திசாலித்தனம்

கொழும்பு, நவ. 3

நாட்டைப் பிரிக்க விடுவதிலும் பார்க்க அதிகாரத்தைப் பிரித்துக் கொடுப்பது புத்திசாலித்தனமான காரியம் அல்லவா!

-இப்படி வெளிவிவகார அமைச்சர் ஜனுப். சாஹுல் ஹமீத் சொன்னார்.

அரச நிர்வாக அதிகாரிகள் சங்கத்தின் 6 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஹமீத் பேசினார்.

நாட்டின் மக்கள் அதிகாரப்பகிர்வு கேட்கின்றனர். மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்குவதன் மூலம் மத்தியில் நிர்வாகப் பொறுப்பு குறைகின்றது. இதனால் மக்களுக்கும் நிர்வாகத்துக்கும் உள்ள இடைவெளியும் குறைகின்றது.

–இப்படி அமைச்சர் ஹமீத் சொன்னார். (உ-எ)

## முறிகண்டிப் பகுதியில் வழமை நிலை திரும்பியது

யாழ்ப்பாணம், நவ.3

முறிகண்டிப் பகுதியால் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் சனிக்கிழமை முதல் வழமைக்குத் திரும்பின.

வியாழக்கிழமை இப்பகுதியில் நடைபெற்ற கண்ணி வெடித் தாக்குதலை அடுத்து முறிகண்டிப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

வீதியால் போக்குவரத்து நடத்திய வாகனங்களில் இருந்தோர் சிப்பாய்களினால் தாக்கப்பட்ட சம்பவங்களும் பெரும் அளவில் இடம் பெற்றன.

எனினும் சனிக்கிழமை சில பஸ்கள் இப்பாதையூடாக அசம்பாவிதம் எதுவுமின்றி போக்குவரத்து நடத்தின.

சிப்பாய்களின் நடைபவனி கிளிநொச்சியை அடைந்ததை அடுத்தே நிலைமை வழமைக்குத் திரும்பியது. (இ-10)

### கால்நடை வளர்ப்போர் சங்கம்

வேலணை, நவ. 3

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால்நடை வளர்ப்பாளர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இச் சங்கத்திற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சகல இடங்களில் இருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் தலைவர் திரு. த. சந்திரசேகரம். (இ)

**வாசகர் திருமுகம்**

## நமது துன்பத்தை யார் தீர்ப்பார்கள்?

பலருடைய துன்பங்களை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் தீர்க்க விரும்புவதால் எங்களை கடவுள் தான் சோதிக்கிறார் போலும்–

கடந்த 15 வருடங்களாக நமக்கு மின்சார விநியோகம் சீராக கிடைப்பதில்லை.

சேவாச்சிரமத்துக்கு சுவாமி சாந்தானந்தா 1971-ம் ஆண்டில் வந்த பொழுதும் பிரத்தியேக மின்சார இயந்திரம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி இருந்தோம்.

இக்கருத்தை எழுதும் பொழுதும் (19-10-86) பருத்தித்துறையில் பல இடங்களில் மின்சாரம் இருக்க. நமக்கு மின்சாரம் இல்லை. பலருடைய துன்பங்களைக் களைய விரும்பும் எங்களுக்கு இத் துன்பம் தீர்வதாயில்லை.

பிரத்தியேகமாக ஒரு மின்சார இயந்திரம் வாங்க நம்மால் முடியாது. இத் துன்பத்தை யார் தீர்த்து வைப்பார்கள்?

பருத்தித்துறை. --சுவாமி சித்ரூபானந்தா

# கந்த ஷஷ்டி விரதம்

## கடாக்ஷம் தரும் விரதம்

சூர்மா மடியத் தொடு வேலவனாகிய முருகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்களுள் மகிமை பொருந்தியது கந்த ஷஷ்டி விரதமாகும்.

ஷஷ்டி என்பது ஆறு. முருகனுக்கு முகங்கள் ஆறு. படைவீடுகள் ஆறு. அதேபோல் இந்த விரத நாட்களும் ஆறு. குரு புங்கவே எண் குண பஞ்சரனாகிய குமரன் சூர பத்மனைச் சங்கரித்த தீரனாக விளங்குகின்றான்.

முருகனைக் கும்பிட்டு முறையிட்ட பேருக்கு முன் செய்த வினை போகுமே என்பதற்கிணங்க அறுமுகனை அடி பணிந்து ஆராதனை செய்தால் நாம் நினைத்த காரியங் கைகூடும் ஷஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.

**கந்தஷஷ்டி இரண்டாவது நாள் இன்று**

இந்தக் கந்த ஷஷ்டி விரதத்தை முறையாக அனுட்டித்தால் புத்திர சந்தானம் உண்டாகும்.

சூரன் -ஆணவம் சிங்கன்–கன்மம், தாரகன்– மாயை ஆகவே மும்மலங்களையும் அடக்கி ஒடுக்கியவன் முருகன். அவன் கமல மலர்ப் பாதங்களைக் கைதொழுதால் கன்மவினை நீங்கி இன்ப நிலை தோன்றும்.

கந்த ஷஷ்டி ஆறு நாளும் உபவாசமிருந்து ஆறும் நாள் நித்திரை விடுத்துக் கண்விழித்து மறுநாள் பாறணை செய்தல் வேண்டும். இந்நாட்களில் கந்தர் ஷஷ்டி கவசம், கந்தர் அனுபூதி முதலானவற்றைப் பாராயணஞ் செய்தல் நல்லது. முருகன் ஆலயங்களில் நடைபெறும் கந்த புராண படனங்களைக் கேட்கலாம்.

துதிப்போர்க்கு வல்வினை போம்; துன்பம் போம் எனும்படி அறுமுகனை கந்த ஷஷ்டியில் வணங்கி ஆராதனை செய்தால் அவனருள் நிச்சயம் கிட்டும்.

அறிவு அகன்றிருக்க வேண்டும். அறிவு ஆழமாயிருக்க வேண்டும். அறிவு கூர்மையாயிருக்க வேண்டும். இதுவே வேல் ஆயுதத்தின் தத்துவம். அது சூரனைக் கொன்ற நன்னாள் கந்தசஷ்டி.



இதனையே வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே என்கின்றார் மணிவாசகர். ஆணவ மலமாகிய சூரனை அறிவு மயமாகிய ஞான வேல் அழித்தது. ஞானப் பயிர் வளர்த்து ஞான மயமாக நின்றார் எம்பெருமான்.

செம்மான் மகளைத் திருடும் திருடனான பெம்மான் முருகன் கந்த ஷஷ்டி விரதம் இருப்போர்க்கு சகல ஐசுவரியங்களையும் ஈந்தருள்வான் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

ஆகவே கந்தவிரதமாம் கந்த ஷஷ்டியைக் கைக்கொண்டு கந்தன் கழலினை பணிந்து அவன் கருணைக் கடாக்ஷம் பெற்றுய்வோமாக.

இராசையா ஸ்ரீதரன்

## கலை, கலாசாரத்தை வளர்க்க பாடசாலைகள் முன்வர வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 3

பாடசாலைகள் தமிழ் மக்களின் கலைகளையும், கலாசாரத்தையும் வளர்க்க முன்வரவேண்டும்.

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற இசை, நடன, நாடகப் போட்டியில் தெரிவானவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம், அண்மையில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரஸ்தாப வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கல்விப் பணிப்பாளர் திரு. சபாநாயகம் மேலும் கூறியதாவது:-

சரஸ்வதிப்பூசை நாட்களில் ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் எனப் பாடுகிறோம்.

ஆனால் இந்த அறுபத்து நான்கு கலைகளும் தமிழ் மக்கள் மத்தியில் வழக்கில் இல்லை, ஒரு சில கலைகளே வழக்கில் உள்ளன.

இந்த அறுபத்துநான்கு கலைகளும் எவை என ஆராய்ந்து தமிழ் சமுதாயத்திற்கு தெரிவிக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் சார்ந்ததாகும்.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்திற்கு வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. பி. சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

வவுனியா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. நாகராசா வைபவ அமைப்பாளராகச் செயலாற்றினார்.

வெளிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. கே. பாலசிங்கம் நன்றியுரை வழங்கினார்.

பரிசு பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு கல்விப் பணிப்பாளர் சான்றிதழ்களை வழங்கினார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்நகரின்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன் 25088
பத்து சமாந்தர லைன்கள்



# உதயன்

03 : 11 : 1986 திங்கட்கிழமை



ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்
நல்லவர்கள்
ரெலிகுளோப்!
ஆர் ஜி கட்டடம், ஸ்ரான்லி வீதி
யாழ்நகர்.


# திருமலைக் கடலிலிருந்து மின்சாரம் உற்பத்தி!

## அமெ. நிறுவனம் முன்வருகிறது

கொழும்பு, நவ. 3

திருகோணமலை கடலில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை நிறுவ அமெரிக்க நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்ற 25 கோடிடாலர் பணத்தைச் செலவழிக்கவும் அந்த நிறுவனம் தயாராக உள்ளது.

நிறுவனத்தின் பெயர் 'சோலர் எனர்ஜி கன்வேர்ஷன்'' என்பதாகும்.

100 மெகாவாட் சக்தி வாய்ந்த மின்நிலையம் நிறுவப்படும் என்று அந்த நிறுவனம் அறிவித்து உள்ளது

ஆனால் உற்பத்தி செய்யப்படும் முழு மின்சாரத்தையு இலங்கை அரசு கொள்வனவு செய்ய வேண்டும் என்று அந்த நிறுவனம் இலங்கையிடம் உத்தரவாதம் கோரியுள்ளது.

இத்தகவல்களை ஜனாதிபதியின் விஞ்ஞான ஆலோசகர் பேராசிரியர் சிரில் பொன்னம்பெருமா தெரிவித்திருக்கிறார்.

திருமலைக்கடலில் இருந்து மின் உற்பத்தி செய்யலாம் என்ற தகவலை 25 ஆண்டுகளுக்கு முன்னே பிரபல விஞ்ஞான மேதையான டாக்டர் ஆர்தர் கிளார்க் வெளியிட்டிருந்தார்.

ஆனால் அமெரிக்க நிறுவனம் கோரும் உத்தரவாதத்தை இலங்கை அரசு அளிக்குமா? என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும் என்று சொன்னார் பேராசிரியர் சிரில் பொன்னம்பெருமா. (இ-எ)

## தெல்லிப்பளை வைத்தியசாலை போதனா ஆஸ்பத்திரியாகும்?

### ஆலோசனைகள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், நவ. 3

வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் போதனா ஆஸ்பத்திரியாக தெல்லிப்பளை மாவட்ட ஆஸ்பத்திரியைத் தாம் உயர்த்துவது சம்பந்தமான யோசனைகளை சமர்ப்பிக்கும்படி சுகாதார அமைச்சு யாழ் பிராந்திய சுகாதார பணிப்பாளரை கேட்டுள்ளது.

சுகாதார சேவைகள் துணை இயக்குநர் நாயகம் டாக்டர் எம். ஏ. எல். ஆர். பெரேரா இக்கடிதத்தை அனுப்பியிருக்கிறார்.

கடிதத்தின் பிரதி, வட இலங்கை மருத்துவக் கல்லூரி நிர்வாக இயக்குநர் சபைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கும் சுகாதார அமைச்சருக்கும் அனுப்பிய கடிதத்தின் பிரதிகளும் அமைச்சினால் யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-எ)

## திருமலை அகதிகளுக்கு உடுப்புப் பார்சல்கள்

வல்வெட்டித்துறை, நவ. 3

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள திருமலை அகதிகளுக்கு லயன்ஸ் கழகத்தினரால் உடுப்புப் பார்சல்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் ஊடாக வல்வை அகதிகள் முகாமில் வைத்து அகதிகளுக்குப் பார்சல்கள் வழங்கப்பட்டன. (இ-160)

## லெபனனில் சமாதானம்

பெய்ரூட், நவ. 2

லெபனனில் சண்டையிடும் ஷியா அமல் மக்கள் படையினருக்கும் பாலஸ்தீனியர்களுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கையொன்று ஏற்பட்டுள்ளது.

சிரியாநாட்டு பார்வையாளர் ஒருவர் இருதரப்புகளுக்குமிடையே சமரசம் செய்து வைத்து இந்த ஒரு வாரகாலம் நீடித்தகடும் சண்டையை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தார். (ஒ)

## அடியவருக்கும் கொடியவருக்கும் வாழ்வளித்தவர் முருகப்பெருமான்

### கந்தபுராண விழாவில் தங்கம்மா அப்பாக்குட்டி

யாழ்ப்பாணம், நவ. 3

அடியவர்களுக்கும் கொடியவர்களுக்கும் வாழ்வு கொடுத்தவர் முருகப்பெருமான். கந்தபுராணம் அதைத்தான் கூறுகின்றது.

இப்படிச் சொன்னார், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி.

நல்லூர் திவ்யஜீவன சங்கத்தில் நேற்றுக் காலை ஒருநாள் கந்தபுராண விழாவைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வட இலங்கை செங்குந்த மகாஜன சங்கம் இந்த விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

காலை நிகழ்ச்சிகளுக்கு சட்டத்தரணி திரு. சி. கனகரத்தினம் தலைமை வகித்தார்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மங்களவிளக்கேற்றினார்.

திரு. ஏ. எஸ். செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையில், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம், கந்தபுராணம் ஆகியன தமிழர் வாழ்வில் இறையன்பைப் போதிக்கும் பொக்கிஷங்கள் — என்று சொன்னார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தொடக்கவுரையில் மேலும் சொன்னதாவது:

இறைநிந்தனை செய்த தேவர்களை முருகப்பெருமான் தண்டித்தார். அதை எடுத்துக் கூறுகிறது கந்தபுராணம்.

முருகப்பெருமான் சூரனை அழிக்கவில்லை. ஆணவத்தை ஒருக்காலும் அழிக்க முடியாது, அதை அகற்றிவைக்கலாம். சூரனும் சிறந்த முருகபக்தன்.

ஆகவே அவனை சேவலும் மயிலுமாகத் தன்னுடன் வைத்துக்கொண்டார் முருகப்பெருமான்.

அடியவர்களுக்கும் கொடியவர்களுக்கும் வாழ்வு தந்த கதையைக் கூறுவதுதான் கந்தபுராணம்.

கந்தபுராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை என்று கூறும் அளவுக்கு கந்தபுராணம் சிறப்புப் பெற்றுள்ளது. - இப்படி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சொன்னார்.

''புராணநோக்கில் கந்தபுராணம்'' — என்ற தலைப்பில் யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் பேசுகையில், "தீமை இடம்பெறுவதை பார்த்துக்கொண்டிருப்பதே ஒரு பாபமான காரியம் என்பதையே புராணங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. —என்று சொன்னார்.

ஒய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கிருஷ்ணர் நன்றி சொன்னார். (இ-எ)

## கிளிநொச்சி பகுதியில் வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 3

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக கிளிநொச்சி சந்தைக்குப் பின்புறமாக உள்ள வீதியால் 2 அடி உயரத்துக்கு தண்ணீர் பாய்கிறது.

இதன் காரணமாக இப்பகுதியூடாக வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது.

சகல வாகனங்களும் முல்லைத்தீவுப் பாதையூடாக போக்குவரத்து நடத்துகின்றன.

கிளிநொச்சிக் குளத்திலும் தண்ணீர் நிறைந்து விட்டதன் காரணமாகவே இப்பாதையூடாக வெள்ளம் வழிந்து ஒடுவதாகத் தெரிய வருகிறது. (இ-10)

### துணைப்படை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஓர் ஆயுதப்படை முகாமில் வைத்து இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ-எ)

## கண்ணீர் அஞ்சலி

மறைந்த பிரபல சட்டத்தரணி க. பரமசிவம்பிள்ளை அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்து எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

பலாலி வீதி, கந்தர்மடம். -- மு. பரஞ்சோதி

## இரசாயனச்சாலை விபத்து; 70 பேர் பலி

சோபியா நவ. 2

பல்கேரியாவின் இரசாயனத் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட விபத்தில் 70 பேர் பலியானார்கள். 19 பேர் காயமடைந்தனர்.

கருங்கடல் துறைமுகமான வர்னாவிற்கு அருகே ஏற்பட்ட இந்த விபத்தால் சுற்றாடல் மாசு அடைந்துள்ளது.

இதனால் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். (ஒ)

## சூடானில் கிளர்ச்சி

கார்ட்டூம், நவ. 2

சூடானில் அரிசி மற்றும் உணவுப் பொருள்களின் விலை உயர்வை ஆட்சேபித்து நூற்றுக் கணக்கான மாணவர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அரசுக்குச் சொந்தமான வாகனங்கள் கற்களால் தாக்கப்பட்டன.

ஆளும் உம்மா கட்சி அதிகாரி ஒருவர் காயங்கள் காரணமாக உயிரிழந்தார்.

45 மாணவர்கள் இக்கிளர்ச்சி சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பிரதமர் சாதிக் அல்மஹ்தியினுடைய காருக்கு கல்லெறிந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார். (-எ)

### மத்திய கல்லூரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை எடுப்பதற்காக இன்று (திங்கட்கிழமை) முக்கிய கூட்டம் ஒன்று கல்லூரியில் நடத்தப்படும் என்று கல்லூரி நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ் இலக்கிய வட்ட உறுப்பினர்களான சசி பாரதியின் பத்திரிகைச் சேவையைப் பாராட்டியும் அண்மையில் கலாநிதிப்பட்டம் பெற்ற நா. சுப்பிரமணியஐயரைக் கௌரவிக்குமுகமாகவும் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை யாழ் இலக்கிய வட்டம் பாராட்டு விழா ஒன்றை நடத்தும்.

மாலை 3 மணியளவில் நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும் இவ்விழாவுக்கு செம்பியன் செல்வன் தலைமைவகிப்பார்.

### சிப்பாய்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களில் தாக்குதல்களுக்கு ஆளாகி காயமடையும் படையினருக்கு மிக விரைவாக வைத்திய சிகிச்சை அளிக்கும் எண்ணத்துடன் தான் இந்த விமானத் தளமும் ஆஸ்பத்திரியும் அமைக்கப்பட்டுள்ளன.

ஹெலிக்கொப்டர்கள் வந்து இறங்கக் கூடியதாக இந்த விமானத் தளம் அமைக்கப்பட்டுள்ளது. (இ-ஐ-எ)


## தேவை

அனுபவம் வாய்ந்த
கடைச்சல் இயந்திர இயக்குநர்கள்
(லேத்மென்)
தேவையாக உள்ளனர். தகுந்த சம்பளம் வழங்கப்படும். புலிகளின் குரல் செய்திப் பலகையில் உள்ள ஆலோசனைப் பெட்டியில் உங்கள் விண்ணப்பங்களைச் சேர்ப்பிக்கவும்.
தமிழீழ விடுதலைப் புலிகள்



மங்களகரமான திறப்புவிழா
## ஸ்ருடியோ வீனஸ்
இன்று மாலை 6-40 மணி தொடக்கம் 7-28 வரை வரும் சுபவேளையில்
பாமா காட்வெயர்ஸ் அதிபர்
உயர்திரு. இரத்தினம் சபாரெத்தினம்
அவர்களால்
மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படும்
வீடியோ படப்பிடிப்பிற்கும்; கலர், கறுப்பு வெள்ளை படங்கள் எடுத்திடவும், புளக்வேலைகளுக்கும் அன்புடன் அழைக்கும்
ஸ்ருடியோ வீனஸ்
266/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
விளம்பர அமைப்பு:
மணிக்குரல் மேஜர் ஷண்


## நீத்தார் பட்டியல்

### கந்தையாபிள்ளை- - பரமசிவம் பிள்ளை (சட்டத்தரணி)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த கந்தையாபிள்ளை - பரமசிவம்பிள்ளை (பிரபல சட்டத்தரணி) சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் K. K. A. கந்தையாபிள்ளை - செல்லம்மா ஆகியோரின் அருமைப் புதல்வரும் நாகம்மா - கந்தையாபிள்ளையின் பெருமகனும், பரமேஸ்வரி, நடராஜா (K. K. A. கந்தையாபிள்ளை கடை உரிமையாளர் - வர்த்தக சங்கத் தலைவர்), கோமளாம்பாள், கௌரிநாயகி, கனகராஜா (சின்னத்துரை & Bro) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி (J. P), ஞானகலை, செல்வரத்தினம் (இளைப்பாறிய கிறீன்லேஸ் Bank உத்தியோகஸ்தர்), நேசராஜா (புனிதா யுவலரிமாட் உரிமையாளர்), பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும்,

செங்கதிர்ச் செல்வன், கிரிதரன், கீதா (V G. H S.), சஞ்சீவ் ஆகியோரின் அருமை மாமனாரும்,

திலகவதி, தங்கேஸ்வரன், திருமகள், திருக்குமார் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (3-11-1986) திங்கட்கிழமை பி. ப. 1-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
குடும்பத்தினர்
80, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## பாடசாலை நேரசூசி திணைக்களம் கோருகிறது

பலாலி, நவ. 3

1987 -ம் ஆண்டு பாடசாலைகளுக்கான 40 நிமிட பாடவேளைகளைக் கொண்ட நேரசூசி கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்துக்காக டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனக் கல்வித் திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களையும் பணித்துள்ளது,

ஆசிரியர் ஆளணிக் கணிப்பு, வகுப்புரீதியாக ஆண், பெண் மாணவர் தொகை, ஆசிரியர் கற்பிக்கும் பாடமும நேரமும், ஆசிரியர் பொறுப்பாகவுள்ள இணைப்பாடவேலைகள், உடல் நலத்துக்காக ஒதுக்கும் 10 நிமிடவேளை, மாணவரின் வரவு பதிதலுக்கான நேர ஒதுக்கீடு என்பன நேரசூசியில் கட்டாயம் இடம்பெற வேண்டுமெனவும் அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் எல்லாப் பாடசாலைகளும் 6 மணித்தியாலத்துக்குக் குறையாது நடத்தப்படுகின்றதா என்பது கடுமையாகக் கவனிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-119)

### நிர்வாக---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இயங்கவைக்கவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள கலசுடர் அலுவலகமாகவே தமிழீழ செயலகம் விளங்கும்.

பணநோட்டு அச்சிடும் திட்டம்தான் சிக்கலானதாக உள்ளது.

இப்படி புலிகள் பேச்சாளர் சொன்னதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-ஐ-எ)

### வைத்திய---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இங்கு விஜயம் செய்ய உள்ளனர்

விசேஷவிமானம்மூலம் நாளை பலாலி விமான நிலையத்தை வந்தடையும் இவர்களை யாழ். வைத்திய அத்தியட்சகர் திரு. எஸ். நச்சினார்க்கினியன் நேரில் சென்று வரவேற்பார்.

யாழ் ஆஸ்பத்திரியின் சேதமடைந்த கட்டடங்களைப் பார்வையிடுவதுடன், இது சம்பந்தமான பூரண அறிக்கை ஒன்றையும் இத்தூதுக் குழு தயாரித்து ஜனாதிபதியிடமும், பாதுகாப்பு அமைச்சிடமும், சுகாதார அமைச்சிடமும் கையளிக்கும். (இ-10)

## அகதிகளுக்கு அன்பளிப்பு

சாவகச்சேரி, நவ 3

சாவகச்சேரி வர்த்தகர் சங்கம், தீபாவளி தினத்தை முன்னிட்டு, அறவழிப் போராட்டக் குழுவினரால் நிர்வகிக்கப்படும் கைதடி - நுணாவிலிலுள்ள அகதிகள் முகாமில் உள்ளோருக்கு சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள், பால்மா, சீனி, பருப்பு ஆகியவைகளை வழங்கியது.

சங்கத்தின் தலைவர் திரு. கே. பத்மநாதன், செயலாளர் திரு. எஸ். திருஞானசோதி பொருளாளர்:- திரு. செல்வராசா ஆகியோர் சமுகமளித்து இவற்றை வழங்கினர்.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா, செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் ஆகியோர் வைபவத்தில் கலந்து கொண்டு சங்கத்தினருக்கு நன்றி தெரிவித்தனர். (இ-31)


## உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

யாழ். ஆஸ்பத்திரி
இரத்த வங்கி
உங்கள் வரவை
எதிர்பார்த்து நிற்கிறது!
இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்



இளவல்களின் அறிவுப்பசிக்கு
விருந்து படைக்க
வந்துவிட்டான்!
" அர்ச்சுனா "

- ★ அறிவுலக அறிமுகம்
- ★ கணிதப்புதிர்
- ★ எண் சிலம்பம்
- ★ பயணம் தந்த பாடம்
- ★ சிந்தனைக் கட்டுரைகள்
- ★ குட்டிக் கதைகள்
- ★ கருத்தோவியங்கள்
- ★ கணனி நிகழ்ச்சித் திட்டம்
- ★ சிந்தனைக் கருவூலங்கள்

உதயன் நிறுவனம் வழங்கும்
" மற்றொரு பரிசு "
அர்ச்சுனா
(திங்கள் இதழ்)
கண்கவர் வர்ண அட்டைப் படத்துடன்
அர்ச்சுனா விற்பனையாகின்றான்
நமது விநியோகஸ்தர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.
விலை ரூபா 3-00 மட்டுமே



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவெட்) லிமிட்டட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 03 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under Number QJ60N 86


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org